1st April 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not think that 264 is a small number. So, I do not think that there is anything wrong in the Markanam firka.

Harijan Christians

* 496 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether Harijan converts to Christianity are treated on a par with Harijan Hindus in the matter of educational concessions;

(*b*) whether any circular has been issued on behalf of the Director of Public Instruction in September 1957, insisting upon the production of conversion certificates as in Appendix **17-B**, of the Madras Educational Rules by Harijan Christians;

(*c*) whether representations have been received from the Tamil Harijan Christian Association requesting cancellation of the said order and grant of concessions irrespective of the conversions having been recent or otherwise; and

(*d*) if so, the action taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*), (*c*) & (*d*) The entire question has been examined with reference to certain representations received by the Government and orders have been issued dispensing with the production of conversion certificates for the grant of fee concessions which are admissible to Harijans, to members of those communities converted to Christianity.

SRI A. V. P. ASAITHAMBI : புத்த மதத்திற்கு மதம் மாறிய ஹரிஜனங்களுக்கு இந்தச் சலுகை அளிக்கப்படுகிறதா ? அல்லது அளிக்கப் படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதுவரையிலும் அந்தப் பிரச்னை நம்முடைய ராஜ்யத்தில் எழவில்லை.

SRI T. T. DANIEL : Whereas the policy of the Government is to give educational concessions to Harijans because they are very, very backward, will the Government think of the desirability of extending these concessions also to all the Harijans whether they are Christians or Hindus by birth?

THE HON. SRI C. SUBRAMANIAM : That is what is being done now. The Harijan converts also are getting educational concessions.

SRI K. R. VISWANATHAN : இந்தச் சலுகைகளை கிறிஸ்தவர்களுக்கும் பிற்பட்ட மக்களுக்கும் நீடிக்க முடியுமா என்று கேட்கிறேன்?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஹரிஜனங்களுக்கு இந்தச் சலுகை கொடுப்பதற்கு காரணம் அவர்கள் கல்வித் துறையில் பிற்போக்காக இருப்பது மட்டும் அல்ல. சமுதாயத்திலும் அவர்கள் தொடப்படாதவர்களாக ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தார்கள். கிறிஸ்தவ மதத்திற்கு

மாறினதற்கு பிற்பாடுங்கூட, கிரிஸ்தவ மதத்தில் பாகுபாடு இல்லாமல் இருந்தாலும், பழக்க வழக்கத்தில் அவர்கள் தொடர்ந்து சமுதாயத்தில் தொடப்படாதவர்கள் என்று ஒதுக்கி வைக்கும் பழக்கம் நீடித்து வருகிறது. மதம் மாறின பிறகும் இவர்கள் பிற்போக்கு நிலையில் இருக்கிறார்கள். மதம் மாறினாலும், மாறாவிட்டாலும் ஹரிஜனங்களைப் பொறுத்த வரை எந்த விதமான பாகுபாடும் கிடையாது.

இந்தச் சலுகையை இப்படியே நீடித்துக்கொண்டு போக முடியாது. மதம், ஜாதி என்ற அடிப்படையில் இல்லாமல், வேறு அடிப்படையில் சலுகை கொடுப்பது பற்றி சர்க்கார் பரிசீலனையில் இருக்கிறது.

SRI S. LAZAR: சார், இந்த சலுகையை கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கும் விஸ்தரிப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, my own impression is that it is applicable to colleges also. I would like to verify it.

SRI A. GOVINDASAMY: கிரிஸ்தவ மதத்தில் இருப்பவர்களும் கல்வித் துறையில் மிகவும் பிற்போக்கான நிலையில் இருக்கிறார்கள் என்று அரசாங்கத்திற்குத் தெரியுமா? அவர்களுக்கு இந்தச் சலுகையை கொடுக்க முன் வருவார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: நான் இதற்கு முன்பு சொன்னதுபோல் இந்தச் சலுகை இருப்பதால் ஒவ்வொருவரும் தங்கள் ஜாதி, தங்கள் மதம் என்று வற்புறுத்தும் நிலைமை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஜாதியை மறப்பதற்குப் பதிலாக, குழந்தையாக இருக்கும்போதே ஜாதியைப் பற்றி நினைக்கும்படியான ஒரு சூழ்நிலையை உண்டாக்கிக்கொண்டிருக்கிறோம். ஜாதி அடிப்படை, மத அடிப்படையில் அல்லாமல் வேறு அடிப்படையில் சலுகையை கொடுப்பது பற்றி சர்க்கார் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. இதில் எல்லா அங்கத்தினர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI T. T. DANIEL: Sir, the policy of the Government is only to give concessions to Harijans who became converts to Christianity. He must have been a Hindu by birth or at least at one stage he must have been a Hindu. That is my submission your honour. In view of the fact that Harijans are also backward will the Government be pleased to relax the rule and extend the fee concessions to all Harijans, whether they are converts or Christians by birth?

THE HON. SRI C. SUBRAMANIAM: That is the concession now given provided the person had belonged to the Harijan community even after that person had got converted or his ancestors got converted to Christianity. These persons are entitled to the concessions.

SRI M. JAGANNATHAN: I understand that some sort of discrimination is made between the old converts and the new converts. How is the old convert considered to be on a better footing in the matter of receiving educational concessions from the Government?

THE HON. SRI C. SUBRAMANIAM: There were, I think, originally some such restrictions that the conversion should have taken place before or at a particular point of time. But I do not

1st April 1958]

think that that restriction now exists. Anyhow if the hon. Member is interested he may ask for the information separately or put a separate question.

SRI P. G. MANICKAM : ஹரிஜனங்களுக்காக பள்ளிக்கூடங்களில் கொடுக்கப்படும் சம்பளம், ஸ்காலர்ஷிப் முதலிய தொகைகள் கல்வி இலாகா நிதியிலிருந்து கொடுக்கப்படுகிறதா அல்லது ஹரிஜன இலாகா நிதியிலிருந்து கொடுக்கப்படுகிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது ஹரிஜன இலாகா நிதியிலிருந்து ஹரிஜனங்களுக்கும் என்றும், பிற்பட்டவர்களுக்கு என்றும், நிதி ஒதுக்கப்படுகிறது.

SRI A. VEDARATHNAM : ஹரிஜனங்களுக்கு " ஸோஷல் டிஸ்எபிலிடிஸ் " என்பது இந்து மதத்தில் தான் இருக்கிறது. மதம் மாறின பிறகு கூட இந்த " டிஸ்எபிலிடிஸ் " உண்டா ? அங்கே இப்போது இந்தச் சலுகை அவசியம்தானா ?

THE HON SRI. C. SUBRAMANIAM : " ஸோஷல் டிஸ்எபிலிடிஸ் " என்பது மதம் மாறின பிற்பாடு கூட இருப்பதை நாம் பார்க்கிறோம். அந்த மதத்திலே பாகுபாடு இல்லை என்றாலும், பழக்க வழக்கத்தில் தொடர்ந்து வருவதைப் பார்க்கின்றோம். ஆகையால் இந்தச் சலுகை அவசியம் என்று தான் நான் கருதுகிறேன்.

SRI N. MARUDACHALAM : சார், கிரிஸ்தவ மதத்தைச் சேர்ந்த ஹரிஜனங்கள் சர்க்கார் கல்விச் சலுகையைப் பெறவேண்டும் என்றால் மணியக்காரரிடமிருந்து ஒரு சர்டிபிகேட் வாங்கி வரவேண்டியிருக்கிறது. இந்து ஹரிஜனங்கள் என்றால்தான் அவர் சர்டிபிகேட் கொடுக்கிறார். கிறிஸ்தவ ஹரிஜனங்கள் என்றால் அவர் சர்டிபிகேட் கொடுப்பது இல்லை. கிறிஸ்தவ ஹரிஜனங்களுக்கு சலுகை கிடைக்கும் பொருட்டு சர்டிபிகேட்டு கொடுக்கும்படி மணியக்காரர்களுக்கு சர்க்கார் உத்திரவு போடுவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கிறிஸ்தவ ஹரிஜனங்களை எப்படி இந்து ஹரிஜனங்கள் என்று போட முடியும். **Orders have been issued dispensing with the production of conversion certificate for the grant of fee concessions which are admissible to Harijans.** ஆகையினால் தான் இப்பொழுது சர்டிபிகேட் வேண்டியதில்லை என்று உத்திரவு போட்டிருக்கிறோம்.

SRI K. VINAYAKAM : Arising out of the answer of the Hon. Minister, may I know, whether Government are contemplating issue of concessions not on the basis of communities like backward and depressed classes, but on the basis of economic and educational backwardness, and if so, whether the Government would come to quicker decision in the matter before the close of the academic year so that all the educationally and economically backward children irrespective of their communities would be benefited by this kind of educational concessions?

THE HON. SRI C. SUBRAMANIAM : It is not such an easy matter. That is why I have taken up the matter. I may inform the hon. Member that I am trying to expedite it as far as possible. But I am afraid the decisions will have to be taken not only in respect of this State but in respect of the entire country. So I intend taking up the matter with the Government of India and this may take some time.